In the Court of the Judicial Magistrate No.II, Kovilpatti
Deposition of Witness

| | | | |
|---|---|---|---|
| CC | 498/2023 | | |
| PW: | 1 | | |
| காவல் நிலையம்: | கோவில்பட்டி மேற்கு | | |
| தேதி: | 12.08.2026 | நாள்: | புதன் |
| பெயர்: | பரமேஸ்வரி | | |
| க/பெ: | அய்யனார் | | |
| ஊர்: | கோவில்பட்டி | | |
| வேலை: | தனியார் | | |
| வயது: | 29 | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 12.08.2026**
(Accused A1 and A2 present).

**முதல்விசாரணை**

1) நான் கோவில்பட்டியில் மந்தித்தோப்பில் வசித்து வருகிறேன். நான் தனியார் கம்பெனியில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அவர்கள் எனது உறவினர்கள் ஆவார்கள். கடந்த 04.07.2022 ம் தேதி காலை 10.00 மணியளவில் எனக்கும் எனது மாமியார் திருமலைச்செல்விக்கும் குடும்ப தகராறு சம்பந்தமாக பேசுவதற்காக எங்கள் வீட்டில் வைத்து, எனது அண்ணன் மகாராஜா எனது தம்பி உத்தண்டராஜ், எனது அத்தை பேச்சியம்மாள், ஆகியோர்கள் பேசிக்கொண்டிருந்தோம்.

2) அப்போது எதிரிகளான கோபாலும், முருகனும் என்னை பார்த்து தேவிடியா முண்ட, என்று அசிங்கமாக பேசி என்னை முடியை பிடித்து இழுத்து கையால் அடித்தார்கள். எனது அண்ணன் மகாராஜாவை கட்டையால் ஆஜர் எதிரிகள் இருவரும் நெற்றியில் அடித்தார்கள். பின்னர் எனது தம்பி உத்தண்டராஜாவையும் ஆஜர் எதிரிகள் கட்டையால் தலையில் அடித்தார்கள்.

3) பின்னர் நான் எனது அண்ணன், தம்பி ஆகியோர்கள் கோவில்பட்டி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சேர்ந்தோம். பின்னர் மருத்துவமனைக்கு வந்த போலிசாரிடம் புகார் வாக்குமூலம் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த புகார் வாக்குமூலம் நான் தான் கொடுத்தேன். ( **மேற்படி புகார் வாக்குமூலம் அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது ).** போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

1) நான் 15 வருடங்களாக ரீஜெண்ட் கார்மெண்ட்ஸ் – ல் வேலை பார்த்து வருகிறேன் என்றால் சரிதான். எனக்கு திருமணம் முடிந்து 9 வருடங்கள் ஆகிறது. எனது கணவர் டிரைவர் வேலை பார்க்கிறார். நான் எனது மாமியார் மாமனாருடன் சேர்ந்து கூட்டு குடும்பமாக தான் வாழ்ந்து வருகிறேன்.

2) நாங்கள் குடியிருந்து வரும் வீடானது எனது மாமனாருக்கு சொந்தமானது என்றால் சரிதான். எதிரி முருகன் எனது கணவரின் தங்கை முருகேஸ்வரியின் கணவர் ஆவார். எதிரி கோபால் எதிரி முருகனின் தம்பி ஆவார். நாங்கள் குடியிருந்து வரும் வீடும் காலி இடமும் சேர்ந்து 5 செண்ட் இருக்கும் என்றால் சரிதான்.

3) எனக்கு எழுதப்படிக்க தெரியும். நான் 10 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். புகார் வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை நான் சொல்ல சொல்ல போலிசார் எழுதினார்கள் நான் படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். நான் கொடுத்த புகார் வாக்குமூலத்தில் நான் வேலைக்கு செல்வதால் குழந்தையை பார்ப்பதில் ஏற்பட்ட பிரச்சனை காரணமாக சண்டை ஏற்பட்டது என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

4) எனது மாமனாருக்கு எனது கணவர் மட்டும் தான் ஒரே மகன் என்பதால் மகளுக்கு எந்த பங்கும் கொடுக்க கூடாது என்று எனது கணவருககு தான் மொத்த சொத்தையும் கொடுக்க வேண்டும் என்று பிரச்சனை செய்தேன் என்றால் சரிதான்.

5) சம்பவத்திற்கு ஒரு வாரத்திற்கு முன்பு நான் எனது மாமியாரை தோசைக்கரண்டியால் அடித்து அவருக்கு தலையில் காயம் ஏற்பட்டு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்தார் என்றால் இல்லை. எனது கணவருடன் வேலை பார்க்கும் நபருடன் நான் பேசி வந்தததால் எனது மாமனார் மாமியார் கண்டித்ததால் பிரச்சனை ஏற்பட்டது என்றால் இல்லை. நான் வேலைக்கு செல்வதால் பிரச்சனை ஏற்பட்டது.

6) சம்பவத்திற்கு ஒரு வாரத்திற்கு முன்பு நான் நேரிடையாக பேசிக் கொண்டிருந்ததை எனது மாமியார் பார்த்து சத்தம் போடவே நான் அவரை அடித்து காயம் ஏற்படுத்தினேன் என்றால் சரியல்ல. சம்பவத்தன்று எனது அண்ணன்,எனது தம்பி எனது அத்தை, அம்மா ஆகியோர்கள் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக எனது மாமியார் மாமனார் வீட்டிற்கு வந்தார்கள் என்றால் சரிதான்.

7) மேற்படி பேச்சு வார்த்தை நடந்த போது நான் மாமியார் வீட்டில் தான் இருந்தேன் என்றால் சரிதான். நான் கோவித்து கொண்டு இளம்புவனம் கிராமத்திற்கு செல்லவில்லை. நான் கொடுத்த புகார் வாக்குமூலத்திலோ, போலிசார் விசாரணையிலோ நான் கோவித்து கொண்டு இளம்புவனத்திற்கு சென்று ஒரு வாரம் இருந்ததாக கூறியுள்ளேனா என்றால் இல்லை.

8) மேற்படி பேச்சுவார்த்தையானது எனது மாமியாரின் வீட்டிற்குள் நடைபெற்றது என்றால் இல்லை வீட்டிற்கு வெளியே வைத்து தான் நடைபெற்றது. நான் கொடுத்த புகார் வாக்குமூலத்திலும், போலிசார் விசாரணையிலும் எதிரிகள் தான்

எனது தலை முடியை பிடித்து இழுத்து அடித்ததாக கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

9) எனது அண்ணனை எதிரிகள் இரண்டு பேரும் சேர்ந்து அடித்தாக தான் புகார் வாக்குமூலத்தில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் புகார் வாக்குமூலத்திலோ, போலிசார் விசாரணையிலோ எனது தலை முடியை பிடித்து இழுத்து அடித்தது கோபால் மைத்துனர் சுரேஷ் என்று கூறியுள்ளேனா என்றால் இல்லை.

10) மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த போது மருத்துவரிடம் என்னை 3 பேர் அடித்தார்கள் என்று தான் கூறினேன். போலிசார் என்னை விசாரணை செய்த போது என்னை 3 நபர்கள் அடித்ததாக தான் கூறியிருந்தேன்.

11) இளம்புவனத்திற்கும் மந்தித்தோப்பிற்கும் சுமார் 20 கிலோ மீட்டர் தூரம் இருக்கும் என்றால் சரிதான். மேற்படி சம்பவம் குறித்து பக்கத்து வீட்டுக்காரர்களுக்கு தெரியுமா என்றால் தெரியும். எனது அண்ணன், தம்பி கட்டையால் அடித்ததால் அவர்களுக்கு இரத்தம் வந்து அவர்களது ஆடையில் இரத்தம் பட்டது என்றால் சரிதான்.

12) கோவில்பட்டி அரசு மருத்துவமனையில் வைத்து இரத்தம் பட்ட ஆடைகளை போலிசார் வாங்கி சென்று விட்டார்கள் என்றால் சரிதான். நான் சொன்ன மாதிரி சொன்ன நாள் நேரத்தில் இடத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

13) எனது மாமியார் வீட்டில்வைத்து பேச்சு வார்த்தை நடந்த போது ஒருவருக்கொருவர் மள்ளுக்கட்டி தள்ளு, முள்ளு ஏற்பட்டது என்றால் சரிதான். மேற்படி தள்ளு முள்ளு ஏற்பட்டதில் எனக்கும் எனது சகோதரர்களுக்கம் எந்த ஒரு

காயமும் ஏற்படவில்லை என்றாலும் முருகன் மனைவி முருகேஸ்வரிக்கு தான் காயம் ஏற்பட்டது என்றாலும் சரியல்ல. இளம்புவனத்திலிருந்து நான் எனது அண்ணன், தம்பியை அழைத்து வந்து எதிரிகளை அடித்து காயம் ஏற்படுத்தினேன் என்றால் சரியல்ல.

14) எனது மாமனார் மாமியார் எனது தவறான பேச்சு வார்த்தையை கண்டித்ததாலும் சொத்துகளை மகளுக்கு எழுதி கொடுத்து விடக்கூடாது என்பதற்காக எதிரிகள் மீது பொய்யாக புகார் கொடுத்து பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல எதிரிகளால் எனக்கோ, எனது தம்பிக்கோ, எனது அண்ணனுக்கோ காயம் ஏற்படவில்லை என்றால் சரியல்ல.

**(குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது )**

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

என்னால் நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு
தட்டச்சு செய்யப்பட்டு / எழுதப்பட்டு
சாட்சிக்கு / எதிரிக்கு படித்து காண்பிக்கப்பட்டு
அவரால் சரி என்று ஒப்புக்கொண்டு என் முன்
கையெழுத்து செய்தார்.

(ஒம்). M. மணிமேகலா, எம்.ஏ., எம்.எல்.,
நீதித்துறை நடுவர் எண்.2,
கோவில்பட்டி.